**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான நான்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு 2013–2014 ஆம் ஆண்டிற்கு அரசு மான்யம் – நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.18 நாள்: 27–03–2014
விஜய, பங்குனி 13,
திருவள்ளுவர் ஆண்டு 2045.

படிக்க:

1. அரசாணை(டி) எண்.07, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 10–11–2011.
2. அரசாணை(டி) எண். 32, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 25–03–2013.
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.3358/மா.தி.2.1/2013, நாள் 11.6.2013.

-------

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கென தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் நான்கு இல்லங்களுக்கு, 2012–13 ஆம் ஆண்டில் திட்டம் தொடர்ந்து செயல்படுத்த திட்டத் தொடராணையும் ஒரு இல்லத்திற்கு ரூ.8,28,300/– வீதம் 4 இல்லங்களுக்கு ரூ.33,13,200/– நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும் இச்செலவினத்தை மேற்கொள்ள முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில், 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறும் நான்கு இல்லங்களான சி.எஸ்.ஐ. பாலர் ஞான இல்லம், அஸ்தம்பட்டி, சேலம், புனித ஜோசப் சாரிட்டி ஹோம், அடைக்கலப்புரம், தூத்துக்குடி, புனித அன்னாள் கருணாலயா மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம், கண்டனி, சிவகங்கை மற்றும் ஐ.இ.எல்.சி மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி மற்றும் மறுவாழ்வு இல்லம், பேரணாம்பட்டு, வேலூர் ஆகிய நான்கு மனவளர்ச்சி குன்றியோருக்கான மகளிர் இல்லங்களை நடத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தொடர் செலவினமாக ஒரு இல்லத்திற்கு ரூ.8,76,300/– வீதம் ரூ.35,05,200/– நிதி ஒளிப்பு செய்தும், வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.10.00 இலட்சம் போக, மீதித் தொகை ரூ25,05,200/–திருத்திய / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதி ஒதுக்கீடு செய்யுமாறும், மேலும் இத்திட்டத்தை 2013–2014 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்த அனுமதியும் வேண்டி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்தபின், அதனை ஏற்று 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி

குன்றிய பெண்களுக்கான மறுவாழ்வு இல்லங்களை நடத்தும் நான்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறும், சி.எஸ்.ஐ. பாலர் ஞான இல்லம், அஸ்தம்பட்டி, சேலம், புனித ஜோசப் சாரிட்டி ஹோம், அடைக்கலபுரம், தூத்துக்குடி, புனித அன்னாள் கருணாலயா மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம், கண்டனி, சிவகங்கை மற்றும் ஐ.இ.எல்.சி மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி மற்றும் மறுவாழ்வு இல்லம், பேரணாம்பட்டு, வேலூர் ஆகிய இல்லங்களுக்கு, 2013–14 ஆம் நிதியாண்டிற்கு மானியம் வழங்க ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> “2235– சமூகப் பாதுகாப்பும் நலனும் 02–சமூக நலன் 101– மாற்றுத் திறனாளிகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்–LI மனவளர்ச்சி குன்றிய வயதான மகளிருக்காக மறுவாழ்வு இல்லங்களைத் தொடங்குதல் 09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.”
> (த.தொ.கு. 2235–02–101–LI–0939)

5. மேலும் இத்திட்டத்திற்கென கோரப்பட்ட தொகையான ரூ.35,05,200/–ல் மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.10,00,000/– போக மீதித் தொகையான ரூ.25,05,200/–ஐ 2014–15 ஆம் ஆண்டு திருத்திய / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக கருத்துரு அனுப்பி பெற்றுக் கொள்ளுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 5–ல் உள்ள நடைமுறைகளை தவறாமல் கடைபிடிக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.13747/JS(AR)/14, நாள் 19.3.14 ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தூத்துக்குடி, சிவகங்கை, வேலூர் மற்றும் சேலம்.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை–18( பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:–**
நிதி (சமூக நலம்)த் துறை, சென்னை–9.
இ.கோப்பு/உதிரி .

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.